உரிமை ஆகும். இந்த உரிமையைக் கேட்கக் கூடாது என்று உறுப்பினர் அவர்கள் கருதுவார்களானால், இந்த அரசாங்கம் அதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை.

திரு. கே. என். குமாரசாமி: தலைவரவர்களே, மத்திய அரசாங்கம் தொடங்குகின்ற தொழில் பெரும் தொழிலாக இருந்தாலும், அதை மாநில அரசு மேற்கொள்வதாக இருந்தாலும், உற்பத்தித் துறையிலே பங்கு ஏற்றுப் பணி புரிவதற்கு இந்தப் பகுதியிலே இருக்கிற மக்களுக்கு நல்ல முறையிலே வாய்ப்பு இருக்க வேண்டும். இப்படி நல்ல முறையிலே பணியாற்ற நம் மக்களுக்கு வாய்ப்பு ஏற்படுவதற்கு மாநில அரசு மத்திய அரசாங்கத்தின் சம்மதத்தைப் பெறுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அகில இந்திய கட்சியைச் சேர்ந்த ஒருவர் இந்த அருமையான கருத்தைச் சொன்னதற்காகப் பாராட்டுகிறேன். எங்கள் அரசு பொறுப்பேற்றதிலிருந்து இதைத் தான் வலியுறுத்தி வருகிறோம். மற்ற ஊர்க்காரருடன், இதிலே பொறுப்புள்ளவர்கள் பலரையும் போட வேண்டும் என்று முயற்சித்துக் கொண்டு வருகிறோம். அதுவும் நம்முடைய அமைச்சர் சேலத்துக்காரராக இருப்பதால் இதை ஒரு பெரிய பிரச்சினையாக எழுப்பக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களுடைய வேண்டுகோளின்படி கேள்வி எண்கள் 11, 12 தள்ளிப் போடப்பட்டுள்ளன.

தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை

13. **வினா.** திரு. சு. துரைசாமி
திரு. கே. எ. வகாப்
திரு. கே. டி. கே. தங்கமணி
டாக்டர் எச். வி. ஹாண்டே

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாடு அரசாங்க பஸ் சர்வீசுக்குத் தனி போர்டு அமைக்க உத்தேசித்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:

(அ) ஆம்.

(இ) தனி போர்டு அமைப்பது பற்றிய சாதக பாதகங்களை அரசு பரிசீலனை செய்து வருகிறது.

1971 ஜூன் 21]

DR. H. V. HANDE : Sir, about three weeks ago the Hon. Minister made a statement outside the House that the Government had intended to constitute this Board. In view of the large-scale problem that the Transport Department is facing and also in view of the great inconveniance experienced by the public, will the Government atleast give us some indication in this House, as to the steps that they are going to take to see that buses are run on better lines and the passengers are given better comforts, especially after a new Minister has taken up this portfolio?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, கடந்த மாதம் அரசு போக்குவரத்துத் துறை ஆய்வின்போது, மாண்புமிகு முதல்வர் அவர்கள் சென்னை நகரப் பேருந்துகளைப் பொருத்தவரையில் தனி வாரியம் அமைப்பது பற்றியும் அதற்கு ஆவன செய்யப்போவதாகவும் எடுத்துரைத்திருக்கிறார்கள். அதன் பொருள் என்னவென்றால், அப்படித் தனி வாரியம் இருக்குமானால், நல்ல முடிவுகளை சர்க்கார் எடுப்பதற்காகவும், அதே நேரத்திலே அதைத் திறமையுடன் நடத்துவதற்காகவும், நிதி வசதி பொருத்தும், நிர்வாக வசதி பொருத்தும் அந்த சாத்தியக்கூறுகள் ஆராயப்படுகின்றன. இன்னும் எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவரவர்களே, அப்படி வாரியம் அமைக்கப்படும்பொழுது அதிலே தொழிலாளர்களுக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கப்படுமா? தொழிலாளர்களும், தொழிற் சங்கங்களும் அதைப்பற்றி என்ன கருதுகிறார்கள் என்பதை அறிய இந்த அரசு தயாராக இருக்கிறதா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தமிழ்நாடு அரசாங்க பஸ் சர்வீசுக்கு தனி வாரியம் அமைக்க வேண்டும் என்பது, தொழிற் சங்கங்களின் கோரிக்கை ஆகும். அதிலே தொழிற் சங்கங்களைப் பொறுத்த வரையில் அதை வரவேற்பார்கள் என்பதிலே ஆச்சரியம் ஒன்றுமில்லை. அந்த நிர்வாக அமைப்பிலே அவர்களுக்குப் பிரதிநிதித்துவம் கொடுக்க முடியுமா என்பது பற்றி, இது தொழிலாளர் அரசு என்ற முறையிலே, ஆராய்ந்து முடிவெடுக்கும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவரவர்களே, தனி வாரியம் அமைப்பது என்பது சென்னை நகரத்திற்கு மட்டும் இருக்குமா அல்லது இப்பொழுது புதிதாக அரசு பல பஸ்களை எடுக்கின்ற காரணத்தினால் தமிழகம் பூராவும் ஓடுகின்ற சர்க்கார் பஸ்களுக்கும் சேர்த்து இருக்குமா என்பதை அறிய விரும்புகிறேன். மேலும், எவ்வளவு காலத்திற்குள் அந்த வாரியம் அமைக்கமுடியும் என்பதையும், புதிதாக பஸ்களை எடுக்கும்பொழுது நிர்வாகத் திறமையுள்ள மகாலிங்கம், டி.வி.எஸ். போன்ற நிறுவனங்களின் அதிபர்களை உள்ளடக்கி ஒரு போர்டு அமைத்து, அவர்களுக்கே

இரண்டு அல்லது மூன்று வருஷம் பொறுப்பைக் கொடுத்து, இந்த நிர்வாகத்தை சிறப்பாக நடத்துவதற்கு சர்க்காருக்கு ஏதாவது யோசனை இருக்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: சென்னை நகர பேருந்துகளுக்கு மட்டும் வைத்து வாரியம் திறப்பதா அல்லது தமிழ்நாடு முழுவதும் ஓடுகின்ற சர்க்கார் பேருந்துகளையும் சேர்த்துக் கொண்டு வாரியம் திறப்பதா என்பதை ஆராய்ந்து தான் முடிவு எடுக்க வேண்டும்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, இந்த டிரான்ஸ்போர்ட் இலாகாவைத் தனி வாரியமாக அமைப்பதன் அவசியம் என்ன? இப்பொழுது அரசாங்கம் நேரடியாக அதை நடத்துவதால் அரசாங்கத்திற்கு இருக்கிற சிரமங்கள் என்ன? இது தனி வாரியமாக அமைக்கப்படும்பொழுது அதிலே தனியார் உறுப்பினர்களும் உறுப்பினர்களாக அமைக்கப்படுவார்களா, அல்லது அரசாங்க உறுப்பினர்கள்தான் அதிலே உறுப்பினர்களாக அமைக்கப்படுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல் சாதக பாதகங்களைப் பற்றித்தான் அரசாங்கம் ஆராய்ந்து வருகிறது.

திரு. கே. ஏ. வகாப்: இப்பொழுது சரியான முடிவு எடுப்பதற்காக அப்படிப்பட்ட வாரியங்கள் அமைப்பதாக அமைச்சர் கூறினார்கள். சரியான முடிவு எடுப்பது என்று சொல்லும் பொழுது, இன்றைக்கு பேருந்துகள் செல்லுகின்ற நேரத்தில் அவற்றிற்கு ஏற்படுகின்ற சாதாரண பழுதுகள் கூட சரியாகக் கவனிக்கப்படுவதில்லை என்ற எண்ணம் மக்களிடையே பரவலாக இருக்கிறது. ஆகவே, 50 பஸ்ஸுகளைக் கொண்ட ஒவ்வொரு அமைப்பாக மாநிலம் எங்கும் ஒரு இலாகாவை அமைத்து அதைக் கண்காணிக்க தனித் தனியாக ஒரு நிர்வாகத்தை அமைக்கக்கூடிய ஒரு எண்ணம் இந்த அரசாங்கத்திற்கு உண்டா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: டெப்போவுக்கு எவ்வளவு பஸ் வைத்திருக்கவேண்டும் என்பதுபற்றி அரசு அறியத்தான் ஒரு லேலண்டு என்ஜினியரை அமைத்து, அவர் அதற்கான முயற்சிகளிலே கடந்த ஜூன் மாதம் 1-ஆம் தேதியிலிருந்து செயல்பட்டு வருகிறார். அவருடைய அந்தப் பரிந்துரை கிடைத்ததும், ஒவ்வொரு டெப்போவுக்கும் எத்தனை வண்டிகளை வைத்துக் கொள்ளலாம், என்னென்ன முறைகளிலே அதை நிர்வாகிக்கலாம் என்பது பற்றி எல்லாம்—அந்த அறிக்கை கிடைத்ததும்—அரசு முடிவு செய்யும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

திரு. ஏ. எம். இராஜா: தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் கூறும்பொழுது போக்குவரத்துத் துறை வாரியம் அமைப்பதாகக் கூறினார்கள். அது தமிழ் நாடு முழுவதற்கும் ஒரு வாரிய

மாக இல்லாமல், தமிழ் நாட்டை ஐந்து அல்லது ஆறு பிரிவு களாகப் பிரித்து ஒவ்வொரு பகுதிக்கும் ஒரு வாரியத்தை ஏற்படுத்தினால், அதன் மூலம் நிர்வாகம் நல்ல முறையிலே நடக்கும் என்பதை அரசு உணர வேண்டும். எனவே, தமிழ் நாட்டை 5 அல்லது 6 பகுதிகளாகப் பிரித்து வாரியத்தை ஏற்படுத்த முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : உறுப்பினருடைய ஆலோசனை வாரியம் அமைப்பது பற்றி முடிவு எடுக்கும்பொழுது கருத்தில் கொள்ளப்படும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

திரு. கே. எஸ். குப்பல் ராமகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, இரவு நேரங்களில் சர்க்கார் பேருந்துக்களில் பிராயாணிகளுக்கு அதிகமாகச் சங்கடங்கள் ஏற்படுவதால், அவர்களுக்குத் தூங்கு வதற்கான வசதியைச் செய்துகொடுக்க அரசாங்கம் முன்வருமா ? அப்படிப்பட்ட வசதி தனியார் பேருந்துகளில் செய்யப்பட்டிருக் கிறது. அதுபோல நம்முடைய பஸ்களிலும் செய்ய முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இப் பொழுது உட்கார்ந்து போவதற்கான வசதிகள் செய்வதில்தான் அரசு கண்ணும் கருத்துமாக இருக்கிறது. மற்ற வசதிகளைப் பற்றி பிறகு யோசிக்கலாம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, கேரள அரசாங்கத்தில் ஒரு போக்குவரத்து வாரியம் நடக்கிறது. அவர்களோடு தொடர்பு கொண்டு, நம் வாரியம் அமைப்பதில் தக்க முடிவு எடுக்க முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, கேரளத்தில் மட்டுமல்லாமல், அண்டை மாநிலங்களான ஆந்திரத் திலும், மைசூரிலும் கூட வாரியங்கள் நடக்கின்றன. அந்த அரசாங்கங்கள் செயல்பட்ட முறை குறித்தும் ஆய்ந்து வருகிறது.

DR. H. V. HANDE : My question was specific. What I asked was a specific question whether he is going to set up a Corporation and the Hon. Minister told us that it is not possible now. May I know what are the steps that are going to be taken immediately to solve the problem ? Since a number of problems were raised, which have been brought to the attention of public and Government, the Hon. Minister said that a Corporation was going to be set up but now the problem has been shoved, the problem has been shelved. What are the specific measures which the Government are going to take to solve this problem? The problem of standees is one such serious problem. It is a problem of which the House is seized of. What steps has the Hon. Minister has taken to solve the problem affecting 10 lakhs of people and about which even the marxists trade union leader of is complaining ? I mean the problem of standees.

Mr. SPEAKER : You have not come to the question so far.

Dr. H. V. HANDE : I have asked a specific question.

Mr. SPEAKER : It may be specific but the hon. Member must know that the main question is about constitution of the Board. The hon. Member is asking what are the steps that are being taken. How does it come within the main question?

Dr. H. V. HANDE : The Hon. Minister has said that he was not going to set up the Board now. Till then, I want to know what are the steps he is going to take . . .

Mr. SPEAKER : How does it come within the purview of the main question? It may be specific. But how does it come within the main question?

Dr. H. V. HANDE : He said that the setting up of Corporation is going to be postponed. I am asking the Hon. Minister to tell us the steps he is going to take to tackle these problems, till then. He has not given the correct reply for that. The Chair also should pull up the Hon. Minister and help the Members. We put questions to get answers.

Mr. SPEAKER : Most of the supplementaries are suggestive.

Dr. H. V. HANDE : I would like to know what are the steps . . .

The Hon. Thiru K. ANBAZHAGAN : On a point of Order Questions cannot be raised on the policy matter of Government during the time of questions.

Dr. H. V. HANDE : I respectfully submit that I did not raise any policy matter. I am only requesting.

Mr. SPEAKER : Please put the question.

Dr. H. V. HANDE : May I know from the Hon. Minister what immediate solution to tackle this problem is envisaged?

The Hon. Thiru S. RAMACHANDRAN : The main question relates to constitution of autonomous body. The Member is raising some of the problems that are of current events. He can give notice of a separate question. If he gives notice of a separate question about his problems, Government will come forward with a reply.

Dr H. V. HANDE : I rise on a point of order. The Hon. Minister says I have got a problem. It is not a problem affecting me. It is a problem of the public; they are not able to get enough seats in the bus . . .

Mr. SPEAKER : The Hon. Member has ample opportunities. He can discuss these things during the budget discussion.

1971 ஜூன் 21]

திருமதி. த. ந. அனந்தநாயகி: தலைவர் அவர்களே, இப்படிப் பேருந்துக்களுக்காக ஒரு வாரியம் அமைப்பது என்பது அதிலே ஒரு நான்-அபிஷியல் சேர்மன் போடுவது என்ற உள் நோக்கத்தோடு . . . .

MR. SPEAKER : The hon. Members should avoil 'உள்நோக்கம் Government do not have உள்நோக்கம்' ஆர் 'வெளிநோக்கம்'. There is only one 'நோக்கம்'.. (சிரிப்பு)

திருமதி த. ந. அனந்தநாயகி : 'உள்நோக்கம்' என்பதை மாடிஃபை செய்கிறேன். 'நோக்கம்' என்று கேட்கிறேன். நான்-அபிஷியல் சேர்மென் போடுவார்களா? அல்லது அபிஷியல் சேர்மென் போடுவார்களா? அதிலே தனி நபருக்கு இடம் உண்டா இல்லையா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இந்த வாரியம் நல்ல நோக்கத்தோடுதான் அமைக்கப்பட விருக்கிறது. அதில் யார் யார் பொறுப்பேற்பார்கள் என்பதையெல்லாம் பொறுத்திருந்துதான் பார்த்து முடிவு செய்ய வேண்டும்.

திரு. எம். சுரேந்திரன் : சார், நேற்றைய தினம் முதல் அமைச்சர் பட்ஜட் உரையில் 50 பஸ் ரூட்டுகளுக்கு மேல் தேசிய உடைமையாக்கப்படும் என்று சொன்னார்கள். இப்பொழுது ஒரு பக்கத்தில் வாரியம் அமைக்கப் போகிறோம் என்கிறார்கள். இப்படி ஒன்றுக்கொன்று முரண்பாடாகச் சொல்வது அந்தத் துறை நிர்வாகம் திறமையாக நடக்கவில்லை என்பதை ஒப்புக் கொள்வதாக இருக்கிறது. உத்தரப் பிரதேசம் போன்ற மாநிலங்களில் இப்படிப்பட்ட போக்குவரத்துத் துறை அதிக லாபகரமாக நடக்கிறது என்பது நம்முடைய அரசாங்கத்திற்குத் தெரியுமா? தேசியம் என்பதற்கும், வாரியம் அமைப்போம் என்பதற்கும் உள்ள முரண்பாடுகளை அரசாங்கம் உணர்ந்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் உத்தரப் பிரதேசம் பற்றிச் சொன்னார்கள். நமக்குப் பெரும்பாலும் நஷ்டம் ஏற்படுவதெல்லாம் நகரப் பேருந்துக்களால்தான். இரண்டாயிரம் வண்டிகளில், ஆயிரம் பஸ்கள் சென்னை நகரத்திலேயே ஓடுகின்றன. மற்ற மாநிலங்களில் இப்படிப்பட்ட நிலைமை இல்லை. வாரியம் ஏற்படுத்துவதன் நோக்கம் 'இன்ஸ்டிட்யூஷனல் ஃபைனான்ஸ்', பல நிறுவனங்களிலிருந்தும் நிதி திரட்டக் கூடிய சாத்தியங்கள் இருக்கின்றன. தொழிலாளர்களும் அப்படி வேண்டும் என்று கோரிக்கை விட்டிருக்கிறார்கள். இந்தச் சூழ்நிலையில், வாரியத்தை அமைக்க வேண்டும் என்ற நிலையில் இந்தக் தொழிலாளர் அரசு முயற்சிகள் செய்கிறது.